# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

புதன்கிழமை 28.04.2021 | supeedsam.com | supeedsam@gmail.com








# இலங்கையில் தீவிரமடையும் கொரோனா

## இரண்டு மீட்டர் சமூக இடைவெளியை கடைப்பிடியுங்கள்




**(ராஜ்)**

தற்போது இலங்கையில் வேகமாக பரவி வரும் வைரஸ் குறித்த உறுதியான ஆய்வு முடிவுகள் வெளியாகும் வரை இரண்டு மீட்டர் சமூக இடைவெளியை பேணுமாறு பொது மக்களுக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் நோயெதிர்ப்பியல் மற்றும் மூலக்கூறு மருத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்திர அறிவுறுத்தியுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## இந்த அறிகுறிகள் இருந்தால் உடனே செல்லுங்கள்

**(காந்தன்)**

காய்ச்சல், இருமல், சளி போன்ற நோய் அறிகுறிகள் காணப்பட்டால் பிள்ளைகளை வீட்டில் வைக்காமல் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## கல்முனையில் திடீர் சுகாதார சுற்றிவளைப்பு



**(எம்.என்.எம்.அப்ராஸ்)**

கொவிட் 19 பரவல் நாட்டில் கடுமையாக பரவிவரும் சூழ்நிலையில் சுகாதார வழிமுறைகளை பேணி நடக்குமாறு சுகாதார தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர்.

02 ஆம் பக்கத்தில்...

## இரண்டாவது டோஸ் இன்று முதல்

**(கிரிதிசன்)**

ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராசெனிகா தடுப்பூசியின் 2 ஆவது டோஸ் இன்று புதன்கிழமை முதல் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## ஓட்டமாவடி பிரதேசத்தில் 1850 கிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது



**(ந.குகதர்சன்)**

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஓட்டமாவடி பிரதேசத்தில் வைத்து 1850 கிராம் கேரள கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர் பயணித்த பல்ஸர் மோட்டார் சைக்கிளும் வாழைச்சேனை பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஜய பெரமுன தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பிறைந்துரைச்சேனை தரிக்கா வீதியை சேர்ந்த 48

02 ஆம் பக்கத்தில்...

## முகத்தை மறைக்கும் ஆடைகளுக்கு தடை



**(ஊர்காவலன்)**

சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவான முகக்கவசங்களை தவிர்ந்த புர்கா

02 ஆம் பக்கத்தில்...

## தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமை கிடைக்கும் வரை போராடுவேன்

**(மட்டுநிருபர்)**

தந்தை செல்வாவின் தமிழ் மக்களுக்கான போராட்டத்தினை மூன்றாவது தலைமுறையாகவும் முன்கொண்டுசெல்வோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.



02 ஆம் பக்கத்தில்...






## வடக்கில் நுழைந்த சீனா




**(யாழ்.கீதன்)**

வடமராட்சியில் சீனமொழியிலான எழுத்துக்களுடன் கட்டடமொன்று அமைக்கப்பட்டு வருகின்றமை மக்களிடத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

வடமராட்சி வத்ராஜன் பகுதியிலுள்ள தனிநபரொருவரது சொந்த காணியில், சிறுவர்களுக்கான விளையாட்டு மைதானமொன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

02 ஆம் பக்கத்தில்...









## அரியநேத்திரனுக்கு நீதிமன்றம் அழைப்பாணை



பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி பேரணியில் நீதிமன்ற தடை உத்தரவை மீறியதாக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற

02 ஆம் பக்கத்தில்...









## முதன் முறையாக ஒரேநாளில் 1000 ஐ தோட்ட கோரோனா

**(ராஜ்)**

இலங்கையில் நேற்று செவ்வாய்க்கிழமை மாத்திரம் 1096 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக

02 ஆம் பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபீட்சம்
supeedsam@gmail.com
supeedsam.com



மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI

முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்

## அரியநேத்திரனுக்கு நீதிமன்றம் அழைப்பாணை

உறுப்பினர் பா.அரியநேத்திரனுக்கு எதிராக கல்முனை பொலிசார் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

இந்த வழக்கு எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதி கல்முனை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அதற்கான நீதிமன்ற கட்டளை கொக்கட்டிச்சோலை பொலிசாரால் நேற்று அரியநேத்திரன் வீட்டில் சென்று கையளித்தனர்.

மாலை 6, மணிக்கு கொக்கட்டிச்சோலை பொலிசாரால் எதிர்வரும் 30/04/2021, கல்முனை நீதிமன்றில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி தொடர்பான நீதிமன்ற கட்டளையை நான் மீறியதாக கல்முனை பொலிசாரால் எனக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பான நீதிமன்ற கட்டளை கையளிக்கப்பட்டது.

இந்த வழக்கில் பாராளுமன்ற உறுப்பினர்களான த.கலையரசன், கோ. கருணாகரம், இரா.சாணாக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஷ்வரன், அம்பாறை மாவட்ட இலங்கைதமிழரசு கட்சி வாலிபர் அணி தலைவர் நிதர்சன், தமிழ் மாணவமீட்பு அணி தலைவர் கணேஷ் ஆகிய ஏழு பேருக்கு எதிராக கல்முனை பொலிசார் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

நீதிமன்ற தடை உத்தரவை மீறி பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணியில் கலந்து கொண்டதாக பொலிசார் வழக்கு தாக்கல் செய்த போதும் எந்த வித தடை உத்தரவுகளும் எந்த ஒரு பொலிசாராலும் தமக்கு கிடைக்கவில்லை என பா.அரியநேத்திரன் குறிப்பிட்டார்.

# மட்டக்களப்பு குடும்ப பிரச்சினையை தீர்க்கச் சென்ற மாமனார் பலி

## தந்தை, 15 வயதுடைய மகனுக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு நகர் பகுதியில் குடும்ப உறவினரின் குடும்ப பிரச்சினையை தீர்ப்பதற்கு சென்றவரை தாக்கியதில் குறித்த நபர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட தந்தையையும் 15 வயதுடைய மகனையும் எதிர்வரும் 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் சிறுவனை சிறுவர் சீர்திருத்த சிறைச்சாலையில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ரி.தியாகேஸ்வரன் நேற்று திங்கட்கிழமை (26) உத்தரவிட்டார்.

ஏறாவூர் ஆறுமுகதான்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தரான தம்பிப்பிள்ளை மனேகராஜா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவத்தில் உயிரிழந்தவர் மட்டக்களப்பு இரண்டாம் குறுக்கு வீதியிலுள்ள அவரது சகோதரியின் மகளின் குடும்பமான கணவன் மனைவிக்குள் ஏற்பட்டுள்ள குடும்பபிரச்சினையை தீர்ப்பதற்காக சம்பவதினமான ஞாயிற்றுக்கிழமை (25) திகதி பகல் 2 மணியளவில் குறித்த வீட்டிற்கு சென்றுள்ளார்.

இந்த நிலையில் குறித்த குடும்ப பிரச்சினை தொடர்பாக கணவன் மனைவியுடன் பேசிக் கொண்டிருந்தபோது அதனை 15 வயதுடைய அவர்களின் மகன் கையடக்க தொலைபேசியில் உயிரிழந்தவரை வீடியோ எடுத்ததையடுத்து உயிரிழந்தவர் அந்த சிறுவனின் கையடக்கத் தொலைபேசியை பறித்து அவனின் கன்னத்தில் அடித்துள்ளார்.

இதனையடுத்து தனது மகனை அடித்ததையடுத்து கோபமடைந்து உயிரிழந்தவரை தந்தையும் மகனும் சேர்ந்து அடித்து தாக்கி தள்ளியுள்ளனர்.

இதனையடுத்து தாக்கியவர்களை உறவினர்கள் விலக்கிய பின்னர் அவரைபார்த்த போது மூச்சின்றி கிடந்ததையடுத்து அவரை உடன் அருகிலுள்ள மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றநிலையில் அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளதாக பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்தை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் சென்று பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேதபரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

இதனிடையே சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட தந்தையையும் 15 வயது மகனையும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ரி.தியாகேஸ்வரன் முன்னிலையில் ஆஜயர்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் சிறுவனை சிறுவர் சீர்திருத்த சிறைச்சாலையில் வைக்குமாறும் பதில் நீதவான் உத்தரவிட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிசார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கில் நுழைந்த சீனா

குறித்த மைதானத்தை அமைப்பதற்கான செலவு, தனிநபர் ஒருவரின் நிதியின் ஊடாக மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த மைதானத்தின் முன்பகுதியில், சீன எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளதுடன் சீன தேசிய கொடியில் காணப்படுகின்ற ராகன் சின்னமும் பதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நடவடிக்கை தற்போது மக்களிடத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமை கிடைக்கும்

தந்தை செல்வாவின் 44ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு களுவாஞ்சிகுடியில் மாபெரும் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமை கிடைக்கும் வரையில் தமிழ் மக்களின் உரிமைக்காக நாடாளுமன்ற உறுப்பினராகவும் இளைஞராகவும் தொடர்ந்து போராடுவேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முதன் முறையாக ஒரேநாளில் 1000 ஐ தொட்ட கொரோனா

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முதன்முறையாக ஒரே நாளில் 1000ம் தொற்றாளர்களை கடந்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

அதனடிப்படையில் இலங்கையில் 103,472 பேருக்கு இதுவரையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களில் மேலும் 276 பேர் நேற்று பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதனால் நாட்டில் இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களில் எண்ணிக்கை 94,856 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை இலங்கையில் 647 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.இலங்கையில் ஒரே நாளில் உச்சம் தொட்ட கொரோனா தொற்றாளர்கள் இலங்கையில் மேலும் 422 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இன்றைய தினம் இதுவரையில் 1096 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் முதன்முறையாக ஒரே நாளில் 1000ம் தொற்றாளர்களை கடந்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும். அதனடிப்படையில் இலங்கையில் 103,472 பேருக்கு இதுவரையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களில் மேலும் 276 பேர் நேற்று (27) பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதனால் நாட்டில் இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களில் எண்ணிக்கை 94,856 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை இலங்கையில் 647 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஓட்டமாவடி பிரதேசத்தில் 1850 கிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

வயதுடைய சந்தேக நபர் என்றும் இவர் தொடர்ந்தும் இவ்வாறு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தவர் என்றும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவருவதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வாழைச்சேனைப் பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின் போதே இச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவருடன் தொடர்புடைய வேறுநபர்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் சேகரிக்கப்பட்டுள்ள புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் போதை வியாபாரம் மற்றும் பாவனையில் ஈடுபடுவோர் தொடர்பில் மேலும் தகவல்கள் சேகரிக்கப்பட்டு விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இரண்டாவது டோஸ் இன்று முதல்

அதன்படி, சுகாதாரப் பிரிவினருக்கு முதலில் அதனை வழங்கவுள்ளதாக மருந்து விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

தடுப்பூசியின் இரண்டாவது டோஸினை செலுத்துவதற்கு தேவையான 350,000 தடுப்பூசிகள் கையிருப்பில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.இலங்கையில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராசெனிகா தடுப்பூசிகளின் 500000 டோஸ்கள் இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இலங்கை மருந்தக கூட்டுத்தாபனம் மேலதிக டோஸ்களை கொள்வனவு செய்து இருந்தது.

ஏற்கனவே 9 இலட்சத்திற்கும் அதிகமானவர்களுக்கு முதலாவது டோஸ் தடுப்பூசி வழங்கப்பட்டு இருக்கின்ற நிலையில், அவர்களுக்கான இரண்டாவது டோஸ் வழங்கும் நடவடிக்கை தொடங்க இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## முகத்தை மறைக்கும் ஆடைகளைக்கு தடை

உள்ளிட்ட அனைத்து விதமான முகத்தை மறைக்கும் ஆடைகளையும் தடை செய்தவற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் இன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டு புர்கா மற்றும் நிகாப் ஆகியவற்றை தடை செய்ய முடிவு எடுக்கப்பட்டதாக அமைச்சர் சரத் வீரசேகர கூறியுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் பாராளுமன்றத்தில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மீதான விவாதத்தின் போது, அமைச்சர் சரத் வீரசேகர புர்காவிற்கு தடை விதிக்கப்படும் என அறிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து குறித்த விவகாரம் பெரும் சர்ச்சை ஏற்படுத்தியிருந்த நிலையில், சம்பந்தப்பட்ட தரப்பினருடன் முறையான ஆலோசனை மேற்கொண்ட பின்னரே முடிவு எடுக்கப்படும் என அரசாங்கம் அறிவித்திருந்தது.

## கல்முனையில் திடீர் சுகாதார சுற்றிவளைப்பு

இதற்கமைய கல்முனை சுகாதார பிராந்திய சேவைகள் பணிமனை எல்லைக்குட்பட்ட கல்முனை ,சாய்ந்தமருது பகுதிகளில் பிராந்திய சேவைகள் பணிமனை பணிப்பாளர் வைத்தியர் ஜி.சுகுணன் தலைமையில் சுகாதார சுற்றிவளைப்பொன்று நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சுகாதார துறை ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் பின்பற்றாமல் , முகக்கவசம் அணியாமல், சமூக இடைவெளியை பேணாமல் நடமாடி திரிந்த பலர் திடீர் சுற்றிவளைப்பின் போது அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன் தேவையான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை,சாய்ந்தமருது பிரிவு சுகாதார வைத்திய அதிகாரி கள் பொதுச்சுகாதார பரிசோதகர்கள், கல்முனை பொலிஸார், பாதுகாப்பு படை அதிகாரிகள், சுகாதார துறை ஊழியர்கள் ஆகியோர் இணைந்து இவ் நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

## இந்த அறிகுறிகள் இருந்தால் உடனே செல்லுங்கள்

தாமதமின்றி பிள்ளைகளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் இயக்குனரும் வைத்தியருமான விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் நிலைமைக்கமைய சிறுவர் வைத்தியசாலைகளின் தயார் நிலை தொடர்பில் வைத்தியசாலையின் இயக்குனரிடம் வினவிய போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர் வைத்தியசாலைகளில் இதுவரையில் எவ்வித கோவிட் தொற்றுக்குள்ளான சிறுவர்களும் சிகிச்சை பெறவில்லை. வைத்தியசாலைகள் தயார் நிலையில் உள்ளது.

காய்ச்சல், இருமல், சளி போன்ற நோய் அறிகுறிகள் காணப்பட்டால் பிள்ளைகளை வைத்தியசாலைக்கு அழைத்து செல்ல தயங்க வேண்டாம். கடந்த காலங்களில் தாமதமாக கொண்டு வரப்பட்டமையினால் சிறுவர்கள் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதனால் இது தொடர்பில் பெற்றோர் அவதானமாக இருக்க வேண்டும் என அவர் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

## இரண்டு மீட்டர் சமூக இடைவெளியை கடைப்பிடியுங்கள்

இந்தியாவில் பரவல் அடைந்துவரும் கொரோனா வைரஸின் மாறுபாடு இலங்கையில் பரவி வருகிறது என்பதற்கு இதுவரை எந்தவிதமான உறுதியான ஆதாரங்களும் இல்லை என தெரிவித்துள்ள அவர், இந்த புதிய வைரஸ் குறித்து முழுமையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின் அடுத்த வாரம் சரியாக கூற முடியும் என்றார்.

இந்தியாவில் பரவல் அடைந்துவரும் வைரஸ் இலங்கைக்குள் பரவ வாய்ப்புள்ள போதிலும் இதற்கான சாத்தியக்கூறுகளை குறைக்க சுகாதார அதிகாரிகள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேநேரம் இந்த வைரஸ் நாட்டில் ஏற்கனவே பரவி வரும் வைரஸின் புதிய மாறுபாடாக கூட இருக்கலாம் என பரிசோதனைகள் காட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பண்டிகை காலத்திற்குப் பிறகு கொழும்பு, குருநாகல் மற்றும் கண்டி பகுதிகளிலிருந்து பெறப்பட்ட கொரோனா தொற்று மாதிரிகளில் இது போன்ற பிறழ்வை அவதானிக்க முடிந்ததாகவும் கலாநிதி சந்திம ஜீவந்திர சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாக பின்பற்றுவதன் மூலம் வைரஸ் நாட்டில் மேலும் பரவுவதைத் தடுக்க முடியும் என்று அவர் கூறினார்.

COLOMBO SHIPPING SOLUTIONS (PVT) LTD.
Galle Road, Colombo – 06, Sri Lanka.
Tel : +94 112 555 567
Whatsapp: +94 77 1766769
E-mail - ops@colomboshipping.com
web - www.colomboshipping.com



We provides a comprehensive range of shipping, logistics and marine services. With office in Colombo, Galle, Hambantota and Trincomalee, we cover all ports in the country, and handle any type of vessels and cargoes.

Services include:
Ship Agency Operations, Marine Services, Ship supplies, Total Project Logistics, Offshore Support Services, Crew Manning Services and Private Maritime Security Services.



Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி

Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி

Aaran Ayurveda
& Wellness Massage
Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaran-ayurveda.ch
Krankenkasse Anerkannt

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும்
பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா - வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் தமிழ் பிரதிநிதித்துவம்; பரிந்துரைகள் வெகுவிரைவில் அரசாங்கத்திடம் கையளிக்கப்படும்

(க.கிஷாந்தன்)



மலையகத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தை தக்கவைத்துக் கொள்வதற்கான பரிந்துரைகள் வெகுவிரைவில் அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் என இ.தொ.கா தெரிவித்துள்ளது.

இ.தொ.காவின் உப தலைவரும், பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் அப்புத்தளைகாகொல்ல பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் இதனை கூறினார்.

தோட்ட கம்பனிகள் மேலதிக கொடுப்பனவை வழங்க ஒப்புக்கொண்டதன் பின்னர் மேலதிக கொழுந்தை பறிப்பதே உசிதம் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இ.தொ.கா 1000 ரூபா சம்பள அதிகரிப்பு விடயத்தில் இதயசுத்தியுடன் நடத்திக்கொண்டுள்ளளதை எவரும் மறுக்க கூடாது எனவும் அவர் கூறினார்.

எனினும் காகொல்ல, பொகவத்தலாவ உள்ளிட்ட பகுதிகளில் நாளொன்றுக்கு 25 கிலோ தேயிலையை பறிக்க வேண்டும் என தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களை நிர்பந்திப்பது வேடிக்கையாகும் எனவும் அவர் கூறினார்.

அந்த பிரச்சினைக்கு அதிகப்பட்சமாக எதிர்வரும் 25 நாட்களுக்குள் தீர்வு கிடைக்கு எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இ.தொ.கா எப்போதும் தொழிலாளர் நலன்களை மாத்திரம் முன்னிறுத்தி செயற்பட்டுள்ளது என்றும் அதற்கமையவே 1000 ரூபா சம்பள விடயத்தையும் அணுகியுள்ளது எனவும் தெரிவித்தார்.

ஏனையவர்கள் முன்னர் மலையக பெருந்தோட்ட மக்களை கம்பனிகளிடம் அடகு வைத்தாகவும் அவர்களை இ.தொ.காவே மீட்டெடுத்துள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

# சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத பயணிகளுக்கு கடுமையான எச்சரிக்கை



(க.கிஷாந்தன்)

நோர்வூட் நகர் உள்ளிட்ட இடங்கள் நோர்வூட் பொலிஸாரால் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

நகரில் உள்ள கடைகள் மற்றும் பொது இடங்கள் இவ்வாறு பொலிஸாரால் இவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளளன.

இதன்போது பொகவந்தலாவையில் இருந்து அட்டன் நோக்கி வந்த பேருந்து ஒன்று பொலிஸாரால் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது பேருந்தில் இருந்த பயணிகள் யாவரும் கீழே இறக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அப்போது முக கவசம் அணியாமலும், சமூக இடைவெளியை பேணாமலும் வந்த பயணிகள் கடுமையாக எச்சரிக்கப்பட்டதுடன், சிலர் நோர்வூட் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மேலும் சுகாதார வழிகாட்டல்களை மீறி பயணிகளை ஏற்றி வந்த பஸ்சின் சாரதியும், நடத்துனரும் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

அட்டன் பகுதியில் இன்றும் ஆங்காங்கே கொவிட் 19 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அக்னிச் சிறகுகள் பேரவையால் மாணவர்களுக்கு கற்பதற்கான கையேடுகள் வழங்கி வைப்பு



எம்சமூகத்தின் கல்விக்காக எந்த நேரமும் அர்ப்பணிக்கும் பரந்துபட்ட சேவை நாயகன் அக்னிச் சிறகுகள் பேரவையின் மற்றுமொரு கல்விப் பணியாக நேற்று கவிஞர்,பல்துறை கலைஞர்,மற்றும் அக்னிச் சிறகுகள் பேரவை ஆலோசகருமான ரெட்ணதுரையின் மனைவி ரெட்ணதுரை பிரசாந்தினியின் பிறந்த நாளில் அவருடைய கணவர் ரெட்ணதுரையின் நிதிப்பங்களிப்பில் ம/மமே/நரிப்புல்தோட்டம் நடேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபரின் வேண்டுகோளை ஏற்று தரம் 5ல் கல்வி கற்கும் 12 மாணவர்களுக்கு அறிவுச்சாகரம் கையேடுகள் அக்னிச் சிறகுகள் பேரவையால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு பாடசாலையின் அதிபர்,ஆசிரியர்கள் முன்னிலையில் அக்னிச் சிறகுகள் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளரும்,உதயகுமார் கல்வி மையத்தின் செயலாளருமான திரு.ம.ஜெயக்கொடி,அக்னிச் சிறகுகள் பேரவை உறுப்பினர் சிவா,உதயகுமார் கல்வி மையத்தின் இணைப்பாளர் லக்சனா ஆகியோரால் வழங்கி வைக்கப்பட்டது.

# பாடசாலைத் திருத்த வேலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கான ஆவணம் கையளிப்பு

(எப்.முபாரக்)



திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் வேண்டுகோளுக்கிணங்க கிண்ணியா வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட தி/கிண்ணியா மத்திய கல்லூரி மற்றும் தி/கிண்ணியா மகளீர் கல்லூரி போன்ற பாடசாலைகளுக்கு திருத்த வேலைகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன,அதற்கான ஆவணங்களை இரு பாடசாலை அதிபர்களிடமும் நேற்று செவ்வாய்க்கிழமை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் கையளித்தார்.பாடசாலையின் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் பாராளுமன்ற உறுப்பினர் இதன் போது பார்வையிட்டார். இதன் போது ஆசிரியர்களும் கலந்து கொண்டார்கள்.

# 4 மாத குழந்தை ஒன்றும் 7 வயது சிறுவன் உட்பட 9 பேருக்கு கொரோனா

(க.கிஷாந்தன்)

பொகவந்தலாவ கிவ் தோட்டத்தில் ஒரே குடும்பத்தைச சேர்ந்த எட்டு பேருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக பொகவந்தலாவ சுகாதார வைத்திய அதிகாரி ஜெய்கணேஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர் பரிசோதனை முடிவிலேயே இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அவர்கள் அனைவரும் ஏற்கனவே தொற்றுக்குள்ளான குறித்த குடும்பத்தின் தந்தையுடன் நெருங்கிய தொடர்பை பேணியவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தொற்றுக்குள்ளான தந்தை பொகவந்தலாவ மோரா தோட்ட தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் சிசிச்சை பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய 8 தொற்றாளர்களும் சித்திரை புத்தாண்டுக்காக கொழும்புக்கு சென்று வந்தவர்கள் என பொகவந்தலாவ சுகாதார வைத்திய அதிகாரி ஜெய்கணேஸ் தெரிவித்துள்ளார்.

தொற்றாளர்களில் 4 மாத குழந்தை ஒன்றும் 7 வயது சிறுவன் ஒருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொற்றாளர்கள் வசிக்கும் வீடு மற்றும் அவர்கள் சென்று வந்த இடங்களும் தோட்ட நிர்வாகத்தால் கிருமி தொற்று நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக நுவரெலியா பொகவந்தலாவ கெர்கர்ஸ்வோல்ட் தோட்டத்திலும் ஒருவருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக பொகவந்தலாவ சுகாதார வைத்திய அதிகாரி ஜெய்கணேஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொட்டகலை நகரிலும் பெண் ஒருவருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளது. நேற்று மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர் பரிசோதனை முடிவிலேயே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர் கொழும்பு பம்பலப்பிட்டி பகுதிக்கு சென்று வந்துள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வா காலத்தில் தீர்வு கிடைத்திருந்தால் சர்வதேசம் நோக்கி தமிழ்த்தேசிய பயணம் சென்றிருக்காது

(துறையூர் சஞ்சயன்)

தந்தை செல்வா காலத்தில் எமக்குத் தீர்வு கிடைத்திருந்தால் சர்வதேசம் நோக்கி தமிழ்த்தேசிய அரசியல் பயணம் சென்றிருக்காது என, இலங்கைத் தமிழரசுக் கட்சி ஊடக செயலாளரும், மட்டு. மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசு கட்சி பட்டிருப்புத் தொகுதி தலைவருமான பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி நிறுவுனரும் தலைவருமான தந்தை செல்வாவின் 44 ஆவது நினைவு தினம், மட்டக்களப்பு நகரிலுள்ள தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

1956 இல் கொண்டு வரப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் 1956, 1958, 1977, 1981 களில் கட்டவிழ்த்து விடப்பட்ட மிலேச்சத்தனமான தமிழினப் படுகொலைகள், 1972 இல் கொண்டு வரப்பட்ட கல்வியில் தரப்படுத்தல் எனக் கட்டமைக்கப்பட்ட தமிழ் இன அழிப்பை சிங்கள பௌத்த அரச பயங்கரவாதம் தொடர்ச்சியாகச் செய்து வந்த எதிர்ச் செயற்பாடுகளின் கேவலங்களுக்கெல்லாம் கேவலமாக உச்சக்கட்ட சிங்கள இனவெறியுடன் 1983 ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட இன அழிப்புப் படுகொலையின் பின்னர் ,துரித கதியில் உலகெங்கிலும் தமிழர்க்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் சென்றுவிடாமல் தடுப்பதற்காக அப்போதைய அரச தலைவராகவிருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனவினால் 6 வது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டது.

எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழ்த் தேசிய இனத்தின் இறைமையையும் சுதந்திரத்தையும் வென்றெடுப்பதற்காகத் தமிழீழத் தனியரசு அமைக்கும் வரலாற்று முதன்மை பெற்ற வட்டுக் கோட்டைத் தீர்மானம் 1976 மே 14 பிரகடனம் செய்த பின்னர் புரட்சிகர விடுதலை இயக்கங்களும் தமிழ் அரசியல் தலைமைகளும் அந்தத் தீர்மானத்தைச் செயலாக்க உறுதியாக வரிந்துகொண்டு களத்திலும் புலத்திலும் செயலாற்றியமை பன்னாட்டளவில் கவனத்தை ஈர்க்கத் தொடங்கியதும் இதனைத் தடுத்துவிட அப்போது ஜே.ஆர். ஜெயவர்த்தனா 6 ஆம் திருத்தச் சட்டம் என்ற அடிப்படை மாந்த உரிமைகளுக்கு எதிரான சட்டத்தைக் கொண்டு வந்தார். அதனூடாக பிரிவினையை தூண்டுவோருக்கு எதிராக சட்டங்களின் ஊடாக தண்டிக்கப்படவும் பிரிவினைவாதம் கோர முடியாதவாறு சத்தியப்பிரமானம் எடுக்கும் நடைமுறையும் ஆறாவது திருத்தசட்டத்தில் சேர்க்கப்பட்டமையால், அப்போது தமிழர் விடுதலை கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களாக வடக்கு கிழக்கில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற பதவிகளை இழந்த வரலாறும் எமக்கு மட்டுமே உண்டு.

அதன் பின்னரான காலத்தில் ஏற்பட்ட ஆயுத விடுதலைப்போராட்டம் உக்கிரம் அடைந்த நிலையில் வடக்கு கிழக்கு முழுவதும் இரண்டு விதமான கட்டமைப்புகள் அதாவது இராணுவகட்டுப்பாடு, விடுதலைப்புலிகள்கட்டுப்பாடு என இரண்டு வகையான நிர்வாக கட்டமைப்புகள் இருந்த வேளையில்தான் 2001, ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப்புலிகளின் அனுமதியுடன் உருவாக்கப்பட்டது வரலாறு.

2009, போர் மௌனித்த பின்னர் சிலர் தமக்கு விரும்பியபடி வரலாறுகளை திரிவுபடுத்தி தமிழ்தேசிய கூட்டமைப்பு உருவாக்கத்துக்கும் விடுதலை புலிகளுக்கும் சம்பந்தம் இல்லையென கூறுகின்றனர். இது நகைப்பான விடயம் என்பதை இலகுவாக புரிந்துகொள்ளலாம்.

வடக்கு கிழக்கில் பலமான ஒரு ஆயுதப்போராட்ட இயக்கம் காலூன்றியுள்ள நிலையில் புலிகளுக்கு தெரியாமலோ அனுமதியின்றியோ அதே வடக்கு கிழக்கில் உள்ள ஏனைய விடுதலை இயக்கங்களையும், அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரு கட்டமைப்பாக ஒரு அரசியல் கட்சியாக இயங்க முடியுமா? அப்படி அரசியல்



கூட்டமைப்பாக சுதந்திரமாக வடக்கு கிழக்கு மாவட்டங்களில் தேர்தலில் போட்டியிட அனுமதித்திருப்பார்களா? என்பது கூட தெரியாத சிலர் வரலாற்றை மறைக்க முற்படுவது ஏன் என்று தெரியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக மட்டக்களப்பில் பிரதேசவாத கருத்துக்களை முதலீடாகக் கொண்டு அரசியல் செய்யும் குறுகிய நோக்கம் கொண்ட அரசியலாளர்களையும் அரசியலில் ஈடுபடுத்தியது தந்தை செல்வாவின் தமிழ்த் தேசிய அரசியலே என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என மேலும் கூறினார்.

# யானை தாக்கி வயோதிபர் மரணம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை -சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் யானை தாக்கி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 5.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் சேருநுவர - ஆர்.பீ.04 பகுதியைச் சேர்ந்த பி.எச்.டி.சுவேற்றி சவரிமுத்து (77 வயது) எனவும் தெரியவருகின்றது)

சம்பவம் குறித்து தெரியவருவதாவது- அவரது வீட்டுக்கு பின்னால் உள்ள காட்டுப் பகுதிக்கு சென்றபோது யானை தாக்கியதாகவும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

மரணம் தொடர்பிலான விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பற்றி கெம்பஸை கொத்தலாவல இராணுவ பல்கலைக்கு வழங்குவது பெரும் அநீதியாகும்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

பற்றி கெம்பஸ் எனும் மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழக கல்லூரியை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டிய தேவை இருக்குமாயின், அதனை தென்கிழக்கு பல்கலைக்கழகத்துடன் இணைத்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என தென்கிழக்கு கல்விப் பேரவை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது விடயமாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோருக்கு அப்பேரவை அனுப்பி வைத்துள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவின் முயற்சி காரணமாக அரபு நாடுகளின் நிதி உதவியுடன் அனைத்து நவீன வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள பெற்றி கெம்பஸ் எனும் பல்கலைக்கழகக் கல்லூரியானது ஈஸ்டர் தாக்குதலைத் தொடர்ந்து, அரசினால் முடக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

இப்பல்கலைக்கழக கல்லூரியாது முஸ்லிம்களுக்கு மாத்திரமல்லாமல் தமிழ் மற்றும் சிங்கள மாணவர்களையும் உள்ளீர்த்து அனைத்து பீடங்களையும் உள்ளடக்கி தேசிய ரீதியில் இயங்க வைப்பதற்கான ஏற்பாடுகளே மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் நிர்வாகத்தில் முக்கிய பொறுப்புகளுக்கும் விரிவுரையாளர்களாகவும் சிங்கள, தமிழ் கல்வியியலாளர்களும் பேராசியர்களும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். எனினும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னர் இவையெல்லாம் மூடி மறைக்கப்பட்டு. முஸ்லிம்களுக்கான தனி ஷரீஆ பல்கலைக்கழகம் என்று முத்திரை குத்தப்பட்டே முடக்கஇது பற்றி கல்வி அமைச்சரும் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இது பெரும் அநீதியான விடயமாகும்.

அவ்வாறு இராணுவ பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டால் எதிர்காலத்தில் பிரதேச மக்களுக்கு இராணுவ அச்சுறுத்தல்கள் ஏற்படும் என்பதுடன் மக்களின் சுதந்திர நடமாட்டத்திற்கும் அசௌகரியங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

எனினும் பெற்றி கெம்பஸ் பல்கலைக்கழக நிர்மாணத்திற்கு அரபு நாடுகள் நிதியுதவி வழங்கியுள்ளமையாலும் இதன் கட்டிடங்கள் முஸ்லிம் கலாசார பாராம்பரிய கலை நுட்ப வடிவில் அமைக்கப்பட்டிருப்பதாலும் இதனை தென்கிழக்கு பல்கலைக்கழக இஸ்லாமிய கலாசார பீடத்தின் பாவனைக்கும் அப்பல்கலைக் கழகத்திற்கென சட்ட பீடத்தை உருவாக்குவதற்குமாக தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு வழங்க அரசாங்கம் முன்வர வேண்டும்- என தென்கிழக்கு கல்வி பேரவை வலியுறுத்தியுள்ளது.

# ஆடை விற்பனை நிலையத்தில் கைப்பையை திருடிய இளைஞர்; பொலிஸார் வலைவீச்சு



(க.கிஷாந்தன்)

ஆடைகள் கொள்வனவு செய்வதற்காக வருகைதந்து, கடை உரிமையாளரின் கைப்பையை (பேர்ஸ்) திருடிச் சென்ற இளைஞரை கைது செய்வதற்கு பொலிஸார் வலைவீசியுள்ளனர்.

கொட்டகலை நகரிலுள்ள ஆடை விற்பனை நிலையமொன்றில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆடை விற்பனை நிலையத்திற்கு வருகைதந்த சந்தேக நபரான இளைஞர், கடை உரிமையாளரின் பையை (பேர்ஸ்) திருடிச் செல்லும் போது அங்கு பொருத்தப்பட்டிருந்த சீ.சீ.டி.வி கமராவில் காணொளி பதிவாகியுள்ளது.

இதனைபயன்படுத்தி குறித்த இளைஞனை கைது செய்யும் முயற்சியில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த கைப்பையில் 20,000 ரூபாய் பணமும், சில முக்கியமான ஆவணங்களும் காணப்பட்டதாக தெரிவித்த அதன் உரிமையாளர் திம்புள்ள பத்தனை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.இது தொடர்பான விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.




# திருகோண மாவட்ட செயலக விழா பிற்போடப்பட்டது

பொன்ஆனந்தம்

கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு 2021 ஐ முன்னிட்டு மே 2 ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டிருந்த விழாவை ஒத்திவைக்க திருகோண மாவட்ட செயலக அலுவலகம் முடிவு செய்துள்ளதாக மாவட்ட செயலாளர் சமன் தர்ஷனா தெரிவித்துள்ளார்.

இவ் விழா மீண்டும் தொடங்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.தற்போதைய கொவிட் சூழலின்படி, மக்கள் சுகாதாரத் துறைகள் வழங்கிய ஆலோசனையைப் பின்பற்ற வேண்டும். அடிக்கடி கைகளை கழுவுதல், வாய் முகமூடிகளை சரியாக அணிவது, சமூக இடைவெளியைபின்பற்றுதல் மற்றும் தேவையற்ற பரவலை கட்டுப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் வைரஸை ஒழிக்க ஒரு வாய்ப்பு உள்ளது.

நகரின் பூம்புஹார் கிராம சேவகர் பிரிவு, திருகோணமல மாவட்டத்தின் கடவனா பிரதேச பிரிவும்ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்டுள்ளன, எனவே மற்ற பகுதிகளில் உள்ள மக்கள் பொறுப்புடன் செயல்பட வேண்டும் மற்றும் அன்றாட நடவடிக்கைகளுக்கு எந்தவித இடையூறும் இல்லாமல் சுகாதார ஆலோசனையின் படிசெயல்பட முடியும் என்றும் மாவட்ட செயலாளர் கூறினார்.

# மதுரங்கேணிக்குளம் பாடசாலை மாணவர்களுக்கு மதிய நேர உணவு வழங்கும் பெறுப்பை ஏற்றுள்ள கனகம்மா பவுண்டேசன்

(ரக்ஸனா)





மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா கல்வி வலயத்திற்குபட்ட அதிகஸ்ரப்பிரதேசபாடசாலையாக காணப்படும் மதுரங்கேணிக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களின் கற்றலை மேலும் மேம்படுத்துவதற்காக அங்கு கல்வி பயிலும் 70 மாணவர்களுக்குரிய மதிய நேரை உணவை வழங்குவதற்கு பொறியலாளர் கே.குமரேசன் அவர்களின் தலைமையில் லண்டனிலிருந்து செயற்பட்டு வரும் கனகம்மா பவுண்டேசன் எனும் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இதனை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளை நடைமுறைப்படுத்துகின்றது.

குறித்த பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தை அதிகரிகும் நோக்கில் பாடசாலை நண்பகல் கலைந்ததும் மாணவர்கள் வீடு செல்லாமல் பாடசாலையிலே இருந்து மாலை வேளைவரைக் கற்பதற்காக மதிய உணவு வழங்கப்படுகின்றது. செய்யப்பட்டுள்ளது.

இம்மாணவர்களுக்கு உணவு வழங்கி வைக்கும் ஆரம்ப நிகழ்வு பாடசாலை அதிபர் கே.மங்களரூபன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் த.வசந்தசராசா, செயலாளர் சா.மதிசுதன், பொருளாளர் வ.சக்திவேல், மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் என பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசுடன் இணைந்து பயணித்தால் மாத்திரமே அம்பாறை மாவட்டத்தை காப்பாற்ற முடியும்

## – பி.எச்.பியனே

(வி.சுகிர்தகுமார்)

அரசுடன் இணைந்து பயணித்தால் மாத்திரமே அம்பாறை மாவட்டத்தை காப்பாற்ற முடியும். இல்லையேல் இங்கு தமிழர்கள் வாழ்ந்தமைக்கான தடயமும் இல்லாது போய்விடும் என தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பொதுஜனபெரமுன பொத்துவில் தொகுதி அமைப்பாளருமான பி.எச். பியனே கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் தரமுயர்விற்கு தடையாக இருந்தவர்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரே எனவும் சாடினார்.

அக்கரைப்பற்றில் உள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில் எனது காலத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப் படகூடாது என்பதில் தமிழ்த்தேசிய கூட்டமைப் பினர் மும்முரமாக செயற்பட்டனர். அந்த கால கட்டத்தில் நால்வராவது வாருங்கள் அந்த பிரதேச செயலகத்தை தரமுயர்த்த அரசுடன் பேசுவோம் என பலமுறை அழைத்தேன் ஆனால் யாரும் வரவில்லை. இதனாலேயே அக்காலத்தில் அதன் தரமுயர்வு தடுக்கப் பட்டது.



தற்போது கூட அரசுடன் இணைந்து நாம் பயணித்திரு ந்தால் பிரதேச செயலகம் மாத்திரமல்ல நாம் பலவற்றை பெற்றிருக்க முடியும். ஆனால் நாம் செய்ததெல்லாம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்கு வாக்களித்து ஒன்றுமில்லாமல் போனது மாத்திரமே என்றார்.

அதுமாத்திரமன்றி எனது காலத்தில் பல அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்தினேன் . ஆனால் அதனை பெற்றுக்கொள்ள யாரும் முன்வரவில்லை. பல அபிருவிருத்தி திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை திருப்பி அனுப்பினர். இதனை நான் ஜனாதிபதியிடம் தெரிவித்தபோது நிதியை அம்பாரை மாவட்டத்தில் தேவைப்படும் யாருக்காவது வழங்குங்கள் என்றார். அதன்படி தேவைப்பட்டவர்களுக்கு நிதியை கொடுத்தேன்.

இந்நிலையில் பியனே ஐந்து வருடகாலத்தில் என்ன செய்தார் என்று கேட்கின்றனர். அப்படியானால் 75 வருகாலமாக அரசியல் நடத்திவரும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மக்களுக்கு எதை செய்துள்ளது என நான் கேட்கின்றேன்.

இதனைவிட கடந்த நல்லாட்சியை கொண்டுவந்ததும் நடாத்தியதும் அவர்களே. அப்போதுதாவது மக்களுக்கு ஏதும் நன்மை கிட்டியதா? அப்படியானாவர்களுக்கு இன்னும் நாம் வாக்களிப்பதற்கு எதற்கு என கேட்கின்றேன்.

ஆகவே பித்தலாட்டக்காரர்களின் கதையை நம்பி உள்ளதையும் இழக்காது அம்பாரை மாவட்ட தமிழ்மக்கள் அரசுடன் இணைந்து பயணிப்பது காலத்தின் தேவையும் கட்டாயமும் என்றார்.

# முன்னாள் அமைச்சர் றிஷாட் பதியுதீனின் கைது இலங்கையின் ஜனநாயகத்தை கேள்விக்குறியாக்குகின்றது

## – கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம்.ஐ.எம்.அப்துல் மனாப்

(அஸ்ரப்கான்)

முன்னாள் அமைச்சர் றிஷாட் பதியுதீனின் கைது இலங்கையின் ஜனநாயகத்தை கேள்விக்குறியாக்குகின்றது என்று கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம்.ஐ.எம்.அப்துல் மனாப் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் றிஷாட் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் றியாஜ் பதியுதீன் ஆகியோரின் கைது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆட்சியாளர்களின் சரிவு நிலையை, அரசாங்கத்திற்கு வருகின்ற விமர்சனத்தை திசை திருப்புவதற்கு தமது அரசியல் இருப்புக்காகவே தலைவர் ரிசாத் பதியுதீன் கைதுசெய்யப்பட்டி ருக்கின்றார். என்பதையே அவர் மீதான கைதுகள் வெளிக்காட்டுகின்றன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைமை ரிஷாட் பதியுதீன் அவர்கள் இலங்கை முஸ்லிம்கள் சார்பில் மிகவும் துணிச்சலாக அவ்வப்போது நடக்கின்ற அநியாயங்களுக்கு குரல் கொடுத்து வருகின்ற ஒருவராக இருந்து வருகின்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் றிஷாட் பதியுதீன் எந்த சந்தர்ப்பத்திலும் யாருக்கும் அஞ்சாமல் தனது முஸ்லிம் சமூகத்தின் இருப்புக்காகவும் அவ்வப்போது இடம்பெறுகின்ற அநியாயங்களுக்கும் மிகச்சிறப்பாக குரல் கொடுத்து வருகின்ற நிலையில், இந்த அரசாங்கம் தங்களது இருப்பை பாதுகாத்துக் கொள்வதற்கும் சிங்கள பெரும்பான்மை மக்கள் மத்தியில் தங்களை அதிகாரபூர்வமுள்ள சிறந்த ஆட்சியாளர்களாக காட்டிக் கொள்வதற்காகவும் முஸ்லிம்களுக்காக குரல் கொடுத்து வருகின்ற துணிச்சலான தலைவரை அடக்கி ஒடுக்குகின்ற முடக்குகின்ற ஒரு நிலையை தொடர்ந்தும் செய்து வருகின்றது. அதன் தொடரிலேயே இந்த அநியாயமான நடுநிசி கைதும் கருதப்படுகின்றது.

சிறுபான்மை இனம் மற்றும் இனத் தலைவர் என்ற ஒன்றுக்காக இவ்வாறு அடக்கி ஒடுக்கப்படுவதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். இந்த ஆட்சியாளர்கள் இவ்வாறான இந்த செயற்பாடுகளை உடன் நிறுத்த வேண்டும்.

ஒரு மக்கள் பிரதிநிதி என்ற அடிப்படையில் அவரது பாராளுமன்ற சிறப்புரிமையையும் கேள்விக்குட்படுத்திய இந்த கைதினை ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தின் மீதுள்ள இந்த அரசாங்கத்தின் பார்வையையே காட்டுகின்றது



எனவேதான் இலங்கையில் முஸ்லிம்களின் புனிதமான ரமழான் மாதத்திலே நடுநிசியில் ஒரு ஜனநாயக கட்சியின் தலைவர் கைது செய்யப்பட்டி ருக்கின்றார். இவரது அநியாயமான இந்த கைதுக்கு எதிராக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் அரசியல் வேறுபாடுகளை மறந்து இப்புனித ரமழான் மாதத்திலே ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோரது விடுதலைக்காக இரு கையேந்தி பிரார்த்திப்பதோடு றிஷாட் பதியுதீனின் விடுதலைக்காக ஜனநாயக நீரோட்டத்தில் ஒன்றுபட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

உண்மைச் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள
WWW.SUPEEDSAM.COM

# புனித ரமலானை முன்னிட்டு பொதிகள் வழங்கி வைப்பு




(யு.எல்.அலி ஜமாயில்)

புனித ரமலானை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முக்கிய தேவையுடைய தேர்வு செய்யப்பட்ட 100 மேற்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை கல்முனை மாநகர சபை உறுப்பினர் சப்ராஸ் மன்சூரினால் 2021.04.26 வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வானது கல்முனை மாநகர சபை உறுப்பினர் திருமதி சுகையில் அஸூஸ் இன் ஒருங்கமைப்பில் சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டட்டது.

சாய்ந்தமருது பிரதேச பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ரிஸ்வானா ,கல்முனை மாநகரசபை உறுப்பினர் ஆயிஷா சித்திக்கா மற்றும் நேசன் எயிட் சிறி லங்கா நிறுவனத்தின் பிரதேச இணைப்பாளார்கள் ஆகியோர்களும் கலந்து கொண்டனர்.

# கல்முனை பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பிரிவு திறந்து வைப்பு

(சர்ஜுன் லாபீர்)

உற்பத்தித் திறன் மேம்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கிலும், உத்தியோகத்தர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கும் நோக்கிலும்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள 20 பிரதேச செயலகங்களில் குளிரூட்டப்பட்ட கல்முனை பிரதேச செயலக திட்டமிடல் பிரிவு காரியாலயம் திறந்து வைக்கும் நிகழ்வு உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி கலந்து கொண்டு உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.



பிரதேச செயலக முன்னாள் கணக்காளர் வை. ஹபிபுல்லாவின் அயராத முயற்சியாலும் இந் நாள் கணக்காளர் யூ.எல் ஜவாகிரின் மிக துரிதமான நடவடிக்கைகளினாலும் இந்த குளிரூட்டும் செயற்பாடு வெற்றிகரமாக நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.மேலும் நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.ரம்சான், சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர். எம் சாலீஹ்,பிரதேச ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் கே.எல் யாசீன் பாவா,பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களான எம். எம்.ஹசன்,யூல்.எல் ரமீஸ்,நிர்வாக கிராம சேவை உத்தியோகத்தர் யூ.எல் பதியுத்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org